**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 453** **நாள்: 20.12.2025**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், பேரக்ஸ் தெரு, மைதானத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.54 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுகளம் கூடை பந்து ஆடுகளம் மற்றும் புனர்மைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து இன்று வைத்தனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (20.12.2025) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், பேரக்ஸ் தெரு, மைதானத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.54 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுகளம் கூடை பந்து ஆடுகளம் மற்றும் புனர்மைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

பின்னர், புனர்மைக்கப்பட்ட உடற்பயிற்சி கூடத்தில் உடற்பயிற்சி இயந்திரம் மூலம் உடற்பயிற்சி செய்முறை பயிற்சியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் புதிதாக கட்டப்பட்ட இறகுபந்து உள்விளையாட்டு ஆடுகளத்தினை குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்து இறகு பந்து விளையாட்டினை தொடங்கி வைத்து பார்வையிட்டனர் பின்னர் கூடைப் பந்து ஆடுகளத்தில் பள்ளி மாணவிகளின் கூடைப்பந்து போட்டியினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து கூடைப்பந்து போட்டியினை பார்வையிட்டார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு அமைச்சர் மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கேடயம் வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டாரத் துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.எல்.தாஹா நவீன், திரு.வெ.பரிமளம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**